# மில்க்வைற் செய்தி
# Milk White News

தபாற்பெட்டி இல. 77, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23233

கௌரவ ஆசிரியர்: திரு. க. சி. குலரத்தினம் ▣ மார்கழி 1986 ▣ இதழ்: 132



## பதினொரு ஆண்டுகள் நிறைவு

**யாழ்ப்பாணத்து** மில்க்வைற் சவர்க்கார நிறுவனத்திலிருந்து மாதந்தோறும் இதழ் இதழாய் விரிந்து மலரும் செய்திக்குப் பதினொரு ஆண்டுகள் நிறையும் போது நூற்று முப்பத்திரண்டு இதழ்கள் இதுவரை விரிந்து மணங் கமழ்ந்துள்ளன.

முருகப் பெருமான் திருவருளாலும் தமிழ்த்தாயின் நல்லாசியாலும் அன்பர் அபிமானிகளின் நல்லாதரவினாலும் எங்கள் செய்தி மாதந்தோறும் வளர்ச்சிப் பாதையில் முன்னேறி வந்துள்ளது.

சென்ற காலத்தின் பழுதிலாத்திறம் போல இனி வருங்காலத்தின் சிறப்பும் இச் செய்திக்கு வந்தடைய வேண்டுமென்பது எங்கள் ஆசை. இதற்கு உறுதுணையாயமைவது உங்கள் அபிமானத்தோடு கூடிய அமோக ஆதரவாகும். இவ்வாதரவுதான் என்னையோ எனின், அது மில்க்வைற் தொழிலகத்தின் பல்வேறு தயாரிப்புகளுக்குக் கொடுக்கும் ஆதரவுதான்.

இந்துபோட் இராசரத்தினம் அவர்களின் கல்விப்பணியை ஒருமுறை நினைவுகூர்வாம்.



யாழ். மாநகர ப. நோ. கூ. சங்கத்தார் மத்தியில் மில்க்வைற் தொழிலதிபரின் மரம் நாட்டும் பணி,

★ அமைதி என்பது செங்கோல் போன்றது ★

உ
சிவமயம்






### சுந்தரமூர்த்திநாயனுர் தேவாரம்

**திருத்துறையூர்**

பண் - தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

**மாவாய் பிளந்தானும் மலர்மிசை யானும்**
**அவாஅவிர் தேடித் திரிந்தல மந்தார்**
**பூவார்ந்தன பொய்கைகள் சூழுந் துறையூர்**
**தேவாஉனே வேண்டிக்கொள் வேன் தவநெறியே.**

திருச்சிற்றம்பலம்

பூக்கள் நிறைந்த பொய்கைகள் சூழ்ந்த திருத்துறையூரில் எழுந்தருளியுள்ள பெருமானே! கேசி என்னும் அசுரன் கொண்ட வஞ்சனே உருவமான குதிரையின் வாயைக் கிழித்த திருமாலும், மலர்மிசையோனுகிய பிரமதேவனும் தேவரீரை வணங்கித் தவநெறியை வேண்டிக்கொள்ள மாட்டாது, தேவரீரின் அளவினே ஆராய்ந்து தேடி அலேந்தனர். ஆனல் அடியேன் தேவரீர் பால் தவநெறியை வேண்டிக்கொள்வேன.




### அமைச்சு

(மந்திரியின் குணமும் செயல்களும்)

**வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் ஆள்வினையோடு**
**ஐந்துடன் மாண்டது அமைச்சு.**

செய்யுங் காரியங்களில் திடமும், குடிகளே நல்ல முறையில் காத்தலும், நீதி நூல்களே நன்காராய்ந்து செய்யத்தக்கதை அறிதலும், விடாமுயற்சியும், செயல்வன்மையும் ஆகிய ஐந்தும் திருத்தமாக உடையவனே மந்திரி ஆவான்.

### On Ministry

He who can select the proper instrument, and the time and knows the manner of exclusions, firmness of purpose, loving care of his subjects and good knowledge by learning and preservation is a minister.

## LEARN YOUR ENGLISH

**Give one word for each group**

1. To cut in pieces
2. A horse kept for hire
3. A word of welcome
4. A shower of shells
5. Sound in body, healthy
6. One of two equal parts
7. A large room
8. To stop from going on
9. Not easy to understand
10. To do a wrong to
11. A musical instrument with strings
12. The top part of the body
13. To make healthy
14. To pile things on
15. To listen to
16. Back part of the foot
17. A place of wickedness
18. A flock of animals of one kind
19. A man of great bravery
20. The skin of an animal
21. To put out of sight

1. Hack 2. Hack 3. Hail 4. Hail 5. Hale 6. Half 7. Hall 8. Halt 9. Hard 10. Harm 11. Harp 12. Head 13. Heal 14. Heap 15. Heed 16. Heel 17. Hell 18. Herd 19. Hero 20. Hide 21. Hide.

### ஆங்கிலத்தில் அடுக்குமொழி

1. Undignified and futile
2. Unfamiliar and distant
3. Unfounded and incredible
4. Unique and original
5. Unjust and ungrateful
6. Unlimited and absolute
7. Unthinking and careless
8. Upright and credible
9. Uproar and confusion
10. Upstart and braggart

★ அவசரப்படுவதால் அலுவல்கள் அரைகுறையாகும் ★

## ப.நோ.கூ. சங்கத்தில் பசுமைப்புரட்சி

யாழ் மாவட்டத்தில் அமையப்பெற்ற 22 ப.நோ.கூ. சங்கங்களில், நிகழ்ந்த கூட்டத்தில் மாரிகாலத்தைப் பயன்படுத்தி மில்க்வைற் அதிபர் அவர்கள் பல பயன்தரு நிழல்தரு மரங்களை ப.நோ.கூ.ச. தலைவர், இயக்குநர், சபை உறுப்பினர்கள், கிளை முகாமையாளர்கள் மற்றும் பொது மக்களுக்கும் வழங்கி மகிழ்வித்தார்.

அவ்வேளை மரம் நாட்டும் மகிமையைப் பிரசுரங்கள், பாடல்கள் மூலம் விளக்கம் அளித்து மரம நாட்டும் தர்மத்தை எடுத்து விளக்கினர். அவ்வேளை மகளிர் குழு கல்விச் சேவை உத்தியோகத்தர்களும பங்குபற்றி தம் சேவைக்கான ஆசிகளைப் பெற்றனர்.

## இன்னது இது எனல்

1. அறிவு எனப்படுவது துன்பம் துடைத்தல்
2. செறிவு எனப்படுவது மும்மையும் செறிதல்
3. ஆண்மை எனப்படுவது ஐம்புலன் வென்றல்
4. கேண்மை எனப்படுவது கேடிடத்து உதவல்
5. அருமை எனப்படுவது அறநெறி வழுவாமை
6. பெருமை எனப்படுவது பிறனில் விழையாமை
7. அறம் எனப்படுவது ஆருயிர் ஓம்பல்
8. உறவு எனப்படுவது உற்றுழி நிற்றல்
9. வாய்மை எனப்படுவது வருந்தாது உரைத்தல்
10. தூய்மை எனப்படுவது உள்ளத் தூய்மை
11. இன்பம் எனப்படுவது ஈறில் இன்பம்
12. அன்பு எனப்படுவது ஆர்வம் உடைமை
13. தவம் எனப்படுவது ஐம்புலம் வெறுத்தல்
14. விரதம் எனப்படுவது கொல்லா விரதம்

— சிவசம்போதனை

## தொல்புரம் மெய்கண்டான் பாடசாலை

காலப்போக்கில் உலகமெங்கும் மாற்றங்கள் உண்டாகின்றன. அந்த வகையில் நாமும் முன்னேற்றமடையாவிட்டால் பின்தள்ளப்பட்டு வருவோம். நமது பிள்ளைகள் காலப்போக்கில் வளர்ச்சிப்பாதைகளில் கண்டவற்றைக் கைவினையாகச் செய்து காட்சியில் வைத்தமை பாராட்டுக்குரியது. பாராட்டுகிறோம், அவர்களுக்கு அறிவு நூல்களையும் பிரசுரங்களையும் அன்பளிப்பாகத் தருகிறோம் என்றும் மில்க்வைற் தொழிலதிபர் தெரிவித்தார்.

## நகைச்சுவை

கலாநிதி யோண்சன் ஆங்கிலப் புலவர் கூட்டத்தில் மிகப்பெரிய பிரமுகர். அவர் நோயுற்றுத் தளர்ந்து கிடந்த வேளையில், புகழ்பெற்ற நாடக நடிகை திருவாட்டி சிடென்ஸ் அவரைப் பார்க்கப் போனார். வந்தவருக்கு ஆசனம் உதவமுடியாத நிலையில் ''அம்மா எத்தனை நூற்றுவருக்குக் கூத்துக்கொட்டகையில் ஆசனம் கிடையாமல் திரும்பிப் போகச் செய்த தாங்கள் ஒரு ஆசனங் கிடையாமல் போக வேண்டி வந்ததே'' என்றார்.



## திருக்கேதீஸ்வரம் சபாரத்தினம் சாமியார்

நாற்பது வருடங்களுக்கு மேலாக திருக்கேதீஸ்வரம் மடத்திலிருந்து அடியார்களுக்கும், அன்பர்களுக்கும் ஆத்மீக அறிவுரைகளை வழங்கியவர். தற்பொழுது திருநெல்வேலி, கல்வியங்காடு வீதி, ஸ்ரீ ராமகிருஷ்ணாலயத்தில் இருக்கிறார்.

அடியார்களும் அன்பர்களும் அவரைச் சந்தித்து அவருடைய அறிவுரைகளையும் ஆசியையும் பெற்றுக் கொள்ளலாம்.

## ஆங்கிலத்தில் உவமை நயம்

1. A Memory like a well ordered cupboard
2. A mind like a book case
3. A ruby like a drop of blood
4. A sound like a throb of a bell
5. A voice as low as sea
6. Agile as a leopard
7. Agitateo like a storm - lossed ship
8. All silent as the sheeted dead
9. As a sea disturbed by opposing winds
10. As blind as a mole
11. As busy as a bee
12. As clear as a whistle

## நவராத்திரி நாள்களில்

இந்த ஆண்டு நவராத்திரி நாள்களில் பாடசாலைகளிலும் கல்வி நிலையங்களிலும் மில்க்வைற் தொழிலதிபர் பரவலாக ஆற்றிய சொற்பொழிவுகளில் பல நல்ல கருத்துக்கள் பரந்திருந்தன. கீழ்ப்படிவு, பாடசாலைப்படிப்போடு நீதிநூல்கள் படித்தல், திருக்குறளைத் தினமும் படித்தல், மாதா பிதா குரு முதலானோரை வணங்குதல், குருபக்தி பிள்ளைகளுக்கு மிகவும் அவசியம். ஆரோக்கியத்துக்கு யோகாசனம். நல்ல உணவு. நேரக்கட்டுப்பாடு. குறித்த நேரத்தில் கடமைகளை மேற்கொள்ளுதல். பாடங்களுக்கு நேரசூசி போல நாளாந்தம் வேலைகளுக்கும் நேரசூசி தயாரித்தல். நல்ல ஓய்வு சம்பூரணவாழ்வு.

★ உடலுக்கு மதுபானம் போல் உள்ளத்திற்கு மமதை ★

## அங்கும் ⟵ ⟶ இங்கும்

**1. பெரிய பம்பாய் நகரம்**

இன்று 90 லட்சம் மக்கள், 5 லட்சம் வாகனங்கள், 35, 000 ராக்சிகள்.

**2. ஐக்கியநாடுகள்**

முதலில் ஐக்கிய நாடுகளின் சபை என அமைந்தது இன்று ஐக்கிய நாடுகள். இதற்கு 41 வயதாகிறது. ஆரம்பம் 24-10-1945.

**3. பருத்திக்கொட்டை**

பருத்தி வளர்ப்பதால் பஞ்சு எடுப்பதோடு, அதன் விதைகள் புரதம் நிறைந்த கால்நடை உணவாகிறது.

**4. சந்திரநாகூர்**

ஆங்கிலேயரும் பிரெஞ்சுக்காரரும் தம்முள் என்றும் போட்டியிட்டவாறு இந்தியாவிலும் போட்டி போட்டு நகரங்களைக் கைப்பற்றியாண்டனர். வடஇந்தியாவில் பிரெஞ்சுக்காரர் கைப்பற்றிய சந்திரநாகூர் அவர்களிடம் 1688 முதல் 1950 வரை இருந்தபின், இந்தியருக்கு மீண்டும் வந்தது.

**5. ஆற்றுநீர்ப் பெருக்கம்**

அடேயப்பா, இந்தியாவில் ஆற்றுப் பெருக்கத்துக்கு அப்பன் சிவபெருமான் தானே. இந்தியா நதிகளின் நீர்ப் பெருக்கம் 130 கோடி ஏக்கர் அடி என்கிறார்கள். அப்படியாயின் ஒல்லாந்து தேசத்தை 150 அடி வெள்ளத்தில் அது ஆழ்த்திவிடுமாம்.

**6. கோப்பிராசா**

ஆங்கிலேயர் இலங்கையில் முதலில் கோப்பித் தோட்டம் செய்து கொள்ளை லாபம் பெற்றுப் பயிரழிவால் அதனை விட்டவர்கள். இந்தியாவில் இன்று கர்நாடக மாவட்டத்தில் அதிக கோப்பி விளைகிறது.

**7. ஆங்கில மொழி**

பிலிப்பீன் நாடு என்பது பல தீவுகளின் கூட்டம். அந்நாட்டை அமெரிக்கா ஐம்பதாண்டுகள் அரசாண்டது. அதனல் அங்கே ஆங்கில மொழி செல்வாக்குப் பெற்றிருந்தது. நாடு சுதந்திரம் பெற்றபின் நல்ல தலைவர்கள் ஆங்கிலத்தை அகற்றவில்லை. அது அகில மொழி எனக் கண்டு அதனையும் தம் சுயமொழியோடு அணைத்துக்கொண்டார்கள்.

**8. மேதைகளின் விரோதிகள்**

மீடியோக்கர் என்னும் மட்டான மக்கள் மேதைகளின் விரோதிகளாயிருக்கிறர்கள் என்று சி. வி. இராமன் கூறினர். சுயமாகச் சிந்தித்து மேதைகள் ஏதாவது சொன்னல் மீடியோக்கர் அவரை மட்டந்தட்டி இருட்டடிப்புச் செய்து விடுகிறர்கள்.

**9. எங்கள் பாடு**

மிகவும் இரகசியம். மக்களால் மக்களுக்கான மக்களாட்சி எம்மை ஆளும் போதும், மக்களில் ஒரு பகுதியினராய நாம் மகிழ்ச்சியின்றி வாழுகின்றோமே. இது யார் செய்த பாபம். இங்ஙனம் செய்தி ஆசிரியர் கூறுகிறர்.

**10. கதகளி நடனம்**

கதக் என வழங்கும் இந்த நடனக்கலை இந்தியாவில் உத்தரப்பிரதேசத்தில் முதலில் ஆரம்பித்தது.

**11. ஞானபீடப் பரிசு**

தரமான நூல்கள் எழுதுவோருக்கும், மாந்தருள் தெய்வமாக வாழ்பவருக்கும் உள்நாட்டு, வெளிநாட்டுப் பரிசுகள் கிடைக்கின்றன. ஞானபீடப் பரிசை அண்மையில் பெற்று மகிழ்ந்தவர் வெங்கடேச ஐயங்கார்.

**13. குறுகியகாலப் பாராளுமன்றம்**


பாராளுமன்ற அமைப்பின் தாயகமான பிரித்தானியாவிலே 1924 ஆம் ஆண்டிலே ஜனவரி எட்டாம் நாள் முதல் ஒக்டோபர் ஒன்பதாம் நாள் வரை வகைகள் நடைபெற்ற பாராளுமன்றம் 266 நாள்கள் நிலைத்திருந்தது.

இலங்கையில் 1960 ஆம் ஆண்டின் மார்ச்மாதம் கூடிய ஐக்கிய தேசிய கட்சியின் பாராளுமன்றம் யூலை மாதத்தோடு கவிழ்ந்தது. நாள் கணக்கில் அது (19-3-1960 – 20-7-1960) வரை நின்றது. கட்சிகளின் பிரதிநிதித்துவம், ஐக்கிய தேசியம் 50, சுதந்திரக் கட்சி 46, சமஷ்டி 15, சமசமாஜிகள் 10, எம். ஈ. பி. 10 பொதுவுடைமை 3, பிறர் 17.

---

## BE A BRAVE CHILD

**Swami Sivananda**



Be bold
Do not be timid
Be cheerful
Be courageous
Walk like a lion
Talk boldly
Remove shyness
Be ever active
Be strong
Take care of your health.

---

### மனிதப்புழுவின் விபரீத புத்தி

மானுடன் தன்னைப் பற்றிப் பிரமாதமாக நினைத்துக் கொண்டிருக்கிறன். உலகத்தின் விடுதலையும், மனித வர்க்கத்தின் கதிமோட்சமும் தன் தோள்களில் தங்கி இருக்கின்றன என்று மானுடப்புழு நினைக்கிறது.

— இப்சன்

---

# பிரித்தானியாவில் உச்சிமலையில் கல்யாணசுந்தர முருகன்

முன்னொரு காலத்திலே திரைகடல்மீது அதிகாரஞ் செலுத்திய பிரித்தானியா, ஆதவன் அஸ்தமியாத பெரு நிலப்பரப்பை ஆண்டுவந்தது. இன்று அத்தனை நாடுகளும் தம்மாணை செலுத்தும் பொதுநல நாடுகளாயின. பெரிய பிரித்தானியா பெயரளவில் நிலவும்போது, அங்கே தலைநகராய லண்டன் இன்று உலகப்பெருநகர் என்னும் தானத்தை யப்பானின் ரோக்கியோவுக்கு விட்டுக் கொடுத்து, தான் பல தேச மக்களின் புகலிடமாயமைந்து நிலவுகிறது. அங்கே சென்று உறைந்து உழைக்கும் தமிழ் பேசும் சைவப் பெருமக்கள் வழிபாடு செய்வதற்கு வசதியாக குன்றமெறிந்தவரும், குன்றுதோறும் விளையாடுபவருமான முருகப்பெருமானுக்கு அழகிய கோயிலமைத்துள்ளார்கள். Brittania Hindu (Shiva) Temple Trust High-gate Hill Murugan Temple, 200 A Archway Road, High Gate Hill London N 6. Consecration Ceremony (13-7-86) மூலஸ்தானத்து முருகன் வள்ளி தேவயானை சமேதராய்க் கல்யாணசுந்தர முருகன் என்னும் திருநாமம் பூண்டு எழுந்தருளியுள்ள காட்சியை மூவர்ணப் படத்தின் மூலம் காணக்கூடியதாய் கும்பாபிஷேக மலர் வெளியிட்டுள்ளார்கள். குருக்கள் என்றும் சிவாசாரியர் என்றும் பட்டம் பெற்ற பதினொருவர் பக்திபூர்வமாகப் பிரதிஷ்டாதி கிரியைகளைப் பத்ததிகள் தவறுமல் பக்குவமாகச் செய்துள்ளார்கள். குளிர்ப் பிரதேசத்திலே இவர்கள் கும்பாபிடேக கைங்கரியங்களை ஆசாரசீலராய் நின்று செய்வதற்கு முருகப்பெருமானின் திருவருள் காத்து நின்றிருக்கவேண்டும். பிரதம ஸ்தபதி ஸ்ரீ முருகானந்தன் அவர்களுக்கு எமது வாழ்த்து.

ஞாலம் நின் புகழே என்றும், எந்நாட்டவர்க்கும் இறைவன் என்றும், விளங்குக உலகமெல்லாம் என்றும், உலகம் உவப்ப என்றும் தமிழன் பாடியவண்ணம் மூவேந்தர் தமிழ் வழங்கும் நாட்டுக்கப்பாலும் முருகனடி மறவாது முன்னின்று வணங்கும் எந்தமிழ் அன்பர்களுக்கு எமது பாராட்டு.

''ஹர கேற் முருகா! கதிர்வேல் அழகா'' என்று முருகனடியார் மொழியும் துள்ளலோசைப் பாட்டுக் கேட்கிறது. ''வற்றாத பொய்கை வளநாடு கண்டு மலைமேவி நின்ற முருகா'' என்று கி. ஆ. பெ. விசுவநாதம் பெரியார் தஞ்சையிலிருந்து தமது நெஞ்சைத் தூதுவிடுகிறார். தருமபுரவாதீனம், நல்லையாதீனம், ஹாவாய் ஆதீனம் முதலான ஆதீனங்களின் பரமாசாரியர்களும், பன்றிமலைச் சுவாமிகள் முதலானோரும் அருளாசி, பிரார்த்தனை உரை வழங்கியுள்ளார்கள்.

## பெரியவர் பெயரால் ஒரு கமம்

புளியங்குளத்தைச் சேர்ந்த பிரதேசத்திலே ஆறுமுக நாவலர் அவர்களின் பெயர் சூட்டிய ஒரு கமத்தை நடத்தி வருகின்ற திரு. மு. பொன்னுத்துரை அவர்கள், மில்க்வைற் தொழிலதிபரின் குளம்தோண்டும் மண்வெட்டிகளுக்குத் தேவையான நல்ல மரத்தின் பிடிகளை அனுப்புவதில் பெருமுயற்சி எடுத்தவர். அவருக்கு நன்றி.

## மறைபொருட் சொற்கள் ஒருசில

| | | | |
|---|---|---|---|
| 1. | பெரியபிள்ளையார் | — | ஆயிரம் |
| 2. | மண்டலம் | — | நாற்பது நாள் |
| 3. | பத்துலட்சம் கோடி | — | அசிந்தியம் |
| 4. | ஆனைக்கொம்பன் | — | நெல் |
| 5. | உருளைக்கிழங்கு | — | சோழிமுட்டை |
| 6. | கங்காபுஷ்பம் | — | மீன் |
| 7. | அன்னக்கும்பம் | — | மலம் |
| 8. | ஊமை எழுத்து | — | பிள்ளையார்சுழி |
| 9. | கட்டை | — | சவம் |
| 10. | கம்பிநீட்டல் | — | தலைமறைவாதல் |
| 11. | நாலிலொரு பங்கு | — | கருந்தலை |
| 12. | கரும்பொன் | — | இரும்பு |
| 13. | கர்வம் | — | இலட்சங்கோடி |
| 14. | கறுப்புக் குதிரை | — | சாராயம் |
| 15. | கிளிகிராதி | — | பதினறு |
| 16. | கிளிகிரி | — | பதினெட்டு |
| 17. | கிளிசரம் | — | பதினைந்து |
| 18. | கிளிசுருதி | — | பதினன்கு |
| 19. | கிளிதிரம் | — | பதினேழு |
| 20. | கிளிதிரிகோவாண்டை | — | பதின்மூன்று |
| 21. | கிளிதோவாண்டை | — | பன்னிரண்டு |
| 22. | கிளிமணி | — | பத்தொன்பது |
| 23. | கிளிமதி வெள்ளை | — | பதினொன்று |
| 24. | கிளிவெள்ளை | — | பத்து |

## தமிழ்மணங் கமழ்கின்றது

யாழ்ப்பாணக் கல்விப் பணிப்பாளர் அவர்களின் பேருக்கத்தாலும், நாவலர் வித்தியாசாலை அதிபர் அவர்களின் ஒத்துழைப்புத் திறனும், சைவத் தமிழாசிரியர்கள் சிலரின் பேருழைப்பினுலும், மாணுக்கர், மாணுக்கியர் காட்டும் பேரார்வம் காரணமாகவும் யாழ்ப்பாணம் ஆரிய பாஷாபிவிருத்திச் சங்கத்தின் பிரவேச, பாலபண்டித வகுப்புகள்: சனி, ஞாயிறு தினங்களில் காலை 8-30 முதல் பிற்பகல் 2-00 மணிவரை கிரமமாக நடைபெறுகின்றன.

## நல்ல நல்ல புத்தகங்கள் நாளுக்குநாள் வெளியாகின்றன

தமிழ்வளர்த்த நல்லூரின் மத்தியில் அமைந்த திருஞானசம்பந்தர் ஆதீனம், இந்துவிடுதி மண்டபம் முதலிய இடங்களில் அடிக்கடி நல்ல நூல்களின் வெளியீட்டு விழாக்கள் நல்லமுறையில் நடைபெறுகின்றன. புத்தகங்கள் பல துறைகளிலும் பெருகி வெளிவருதல் வேண்டும் என்பது மறுமலர்ச்சிக்காரரின் மனப்பூர்வமான வேண்டுகோள்.

## கரவெட்டி யாக்கரு சனசமூக நிலையம்

இவர்கள் நடத்தும் நூலகம், பாலர்பாடசாலை என்பனவுக்கு மில்வைற் தொழிலதிபர் அன்புக்கரம் நீட்டி ஆதரவு செய்தமையை அவர்களும் ஊரவர்களும் பாராட்டுகிறுர்கள். நன்றி.

★ நல்லொழுக்கம் என்றும் துணை நிற்கும் ★

## சைக்கிள் வண்டியின் மறுமலர்ச்சிக் காலம்

இற்றைக்கு எழுபது ஆண்டுகளுக்கு முன் சைக்கிள் ஓடத் தெரிந்தவர்களின் தொகையை விரல்விட்டு எண்ணிக்கொள்ளலாம். ''அக்காளும் தங்காளும் போல அலை போகும் அழகைப்பார்'' என்று கவிமணி சைக்கிளின் இரண்டு சில்லுகளையும் பாடினர். உழக்குவண்டி, உந்துவண்டி, இரட்டைச் சுவட்டுவண்டி, மிதிவண்டி, ஈருருளி, துவிச்சக்கரம் முதலிய பல பெயர்களால் எம்மவர் வழங்கிய வண்டி சைக்கிள் வண்டி அந்தக்காலத்திலே றலி, பி. எஸ். ஏ, ஹம்பர் முதலிய இனங்கள் எங்கள் வீதிகள் ஒழுங்கைகளில் பவனி வந்தன. ஹன்ரர் அன் கொம்பனி என்னும் நிறுவனம் ஒன்று நீண்டகாலம் றலி இனத்து சைக்கிளை இறக்குமதி செய்து விநியோகித்து வந்தது.


அந்தக்காலத்தில் கறுப்பு, பச்சை என்னும் இரு நிறங்களில் வந்த சைக்கிள்களுள், பச்சை நிறத்தது பத்து ரூபா மேலதிக விலையுள்ளதாய் ஸ்பெஷல் றலி எனப் பெயர் பெற்றது. சாதாரண கறுப்பினம் எழுபது ரூபாவுக்குக் கிடைக்கக் கூடியதாக இருந்தது. அக்காலத்தில் குரோமியம், வெள்ளி முதலானவற்ருல் செய்யப்பட்ட அலங்காரப் பொருள்கள் பலவிருந்தன. அவற்றையெல்லாம் பூட்டிச் சைக்கிள் ஓடியவர்களும் இருந்தார்கள். இலங்கைக்கு முதன் முதலாகச் சைக்கிளை இறக்குமதி செய்தவர்கள் விற்ரோல் என்னும் கொம்பனியாராவர். அவர்கள் 1883 ஆம் ஆண்டில் அதனை இறக்குமதி செய்தனர் என்பர்.

நாளடைவில் நாடெங்கும் ஆயிரக்கணக்கான சைக்கிள்கள் பொதுமக்களின் உபயோகத்தில் பரவிப் பெருகி இருந்தன. பின்னர் மோட்டார்வண்டி, மோட்டார்பஸ், ராக்சி முதலியன வேகமாகவும் வசதியாகவும் போக்குவரத்துச் செய்வதற்குக் கிடைக்கவே, சைக்கிளின் உபயோகம் வெகுவாகக் குறைந்தது.

ஆனல் இன்று பெரியவர்கள், நிதி படைத்தவர்களும் சைக்கிள் வண்டியையே தஞ்சம் எனக்கண்டு பயன்படுத்துகின்றனர். அன்றி இன்று பாடசாலை மாணுக்கர் ஆயிரக்கணக்கில் அதனை ஓட்டிப் போகும் வகையில் அவர்களை விட எண்ணிக்கையில் அதிகமானவர்களாய்ப் பெண்பிள்ளைகள், மாதர், தாய்மார்களும் விரைவாகச் சைக்கிள் ஓடுகிருர்கள். சட்டத்தரணிகள் விலையுயர்ந்த காரில் சாய்ந்திருந்து போன காலம் போய், இன்று சைக்கிள் உழக்குகிருர்கள். இது சனரஞ்சகமானவண்டி. இதன் இன்றைய விலை மூவாயிரத்தைத் தொடுகிறது.

## இருநூறுண்டுகளாய்விட்டன

நீங்கள் உபயோகிக்கும் கைலேஞ்சி என்னும் கைத்துணி சற்சதுர அமைப்பில் உலாவந்து இருநூறுண்டுகளாய்விட்டன. பிரான்ஸ் தேசத்து பதினுரும் லூயிமன்னன் இட்ட 1785 ஆம் ஆண்டுக் கட்டளையின் வண்ணம் அது சதுர வடிவு எடுத்தது. நாகரிகவுலகுக்கு பாரிஸ் நகரம் தானே தலைநகரம்?



1. பரவெளி எதனைக் குறிக்கிறது?
முப்பத்தாறு தத்துவம் கடந்த ஞானகாசத்தை.
2. ஞானகாசம் என்பது யாது?
சிதம்பரம், சிற்றம்பலம், திருவம்பலம்.
3. ஞானகாசத்தில் நிகழ்வது யாது?
நடராசப் பெருமானின் திருநடனம்
4. ஞானகாசத் திருநடனம் என்பது யாது?
சிதம்பரத்து இரகசியம்
5. நடராச நடனத்தின் பொருள் என்ன?
உலகத்தின் இயக்கம்
6. சிவத்தை வேறெங்ஙனம் வழங்குவர்?
நாதம்.
7. சக்தியை வேறெங்ஙனம் வழங்குவர்?
விந்து.
8. நாதவிந்து என்பதனல் கருதப்படுவது என்ன?
சிவமும் சக்தியும் பிரிக்கமுடியாதவை.
9. பிரிக்கமுடியாத சிவசக்தி வடிவம் எது?
சிவலிங்கம்
10. கோமுகியில் வடிவது என்ன?
திருவருளாய தீர்த்தம்.
11. சிவலிங்கத்துக்கு முன்னமர்ந்த நந்தி என்பது யாது?
தர்மதேவதை, அது ஆனந்தமாய் இருப்பது, அது சாத்துவிக குணமுள்ளது. பந்தபாசம் அற்றது. பக்குவான்மா எனப் பெயர்பெற்றது.

## நாவற்குழி சித்திவிநாயகர் சனசமூக நிலையம்

அண்மையில் திறப்புவிழா நடைபெற்றபோது பட்டயக் கணக்காளர் திருஞானசம்பந்தர், சனசமூகநிலையப் பொதுச் செயலாளர் வரதராசர், தலைவர் பவளகேசன், செயலாளர் முகுந்தன் முதலானோர் மில்க்வைற் தொழிலதிபர் தங்கள் நிலையத்திற்கு அனுப்பிய பிரசுரங்களுக்கு நன்றி தெரிவித்துள்ளார்கள்.

★ அறிவு முதிரப் பிழைகள் உதிர்ந்துபோகும் ★

## சில மீன்கள்

அம்பட்டன் கத்தி, அள்ளாத்தி, அனை, ஊடகம், ஊடான், எருமைநாக்கி, எறியால், ஏமின்கோலா, ஏரங்கம், ஓங்கில், ஒட்டாங்கிளிசல், ஒட்டாம்பாரை, ஓலைவாளை, கச்சலி, கட்டாம்பாரை, கத்தலை, கலவாய், களங்கட்டி, காசாப்பாரை, காடன், காதலம், காலா, காணாங்கெளிறு, கிழங்கான், கிளுவை, கீச்சான், குண்டேறு, குரவை, குருவி, குழுமுரல், குள்ளக்கெண்டை, கொங்கனியான், கொடுவாய், கொத்தனை, கொய்பன், கொறுக்கை, கோலாச்சி, சகலி, சகுலகண்டன், சபரம், சவனம், சாவாளை, சிப்புச்சரட்டை, சுதும்பு, செங்கத்தலை, செந்தல், சேங்கண்ணி, சேனா, சோற்றுக்கற்றலை, தட்டைக்காரை, தண்டிகம், துடுப்பாற்றி, தும்பி, தேங்காய்ப்பாரை, தேட்கெண்டை, பேத்தை, பேய்ச்சாளை, மடவை, மண்ணா, மாங்கன், வதுரி, வஞ்சனம், வஞ்சிரம், வஞ்சூரன், வதாலம், வாளா, வெள்ளிக்காசு, வேடை வேளா.

## மில்க்வைற் தொழிலதிபருக்கு பாராட்டு

மில்க்வைற் தொழிலதிபர் கனகராசா அவர்கள் பல்லாண்டுகளாகச் செய்துவருகின்ற பரவலான பணிகளுள் மரம் நாட்டும் பணி இன்று நாடறிய மேலிடங்களிலும் பரவிவருகிறது. இதனை உன்னிப்பாகக் கவனித்துவரும் உழைக்கும் பத்திரிகைகள் தங்கள் தலையங்கங்களிலும் அவரின் பணியைப் பாராட்டிவருகின்றன. மரம் நாட்டும் பணி பலநோக்குடையது என்பதை எல்லோரும் அறிந்து கொண்டார்கள். நான்கு பரப்பில் நாற்றுமேடை தயாரித்து தொழிலதிபர் இனிவரும் காலத்தில் இன்னும்பெரிய பரப்புகளில் நாற்றுமேடைகள் அமைப்பதற்கான சூழ்நிலை உருவாகும். அதனையே நாமும் எதிர்பார்க்கிறோம். மரம்நாட்டும் பணியில் உங்கள் சேவை எங்களுக்குத் தேவை. வடபிரதேசம் முதலில் வழிகாட்டியாக முன்னேறி வருகிறது, வளர்கிறது, பசுமையாகிறது. பூலோகத்தியற்கையெல்லாம் பச்சை பச்சை.

## சைவமின்றேல் தமிழில்லை
## தமிழின்றேல் சைவமில்லை

இத்தகைய இலட்சியத்தைக் கொண்ட மட்டக்களப்பு இந்துசமய விருத்திச் சங்கம் கடந்த இருபத்தெட்டு ஆண்டுகள் நல்லபணி புரிந்துள்ளது. அவர்கள் தங்களுக்குத் தேவையான சைவத் தமிழ் நூல்களை உபகரித்த மில்க்வைற் தொழிலதிபரைப் பாராட்டுகிறார்கள்.

## As Long as you Ever Can

1. Do all the good you can
2. By all the means you can
3. In all the ways you can
4. In all the places you can
5. At all the places you can
6. To all the people you can
7. As long as you ever can

— Wisdom

## திருப்பெருந்துறையுறை சிவன்

திருப்பெருந்துறையில் மாணிக்கவாசக சுவாமிகள் அமைத்த ஆவுடையார் கோயில் அற்புத அமைவுகள் அமைந்ததாகும். ஆன்மநாயகராய இறைவனாலயமாதலால் அங்கெழுந்தருளியவர் திருநாமம் ஆத்மநாதன் என்பதாகும். ஆன்மசித்தி பெற்ற ஆலயமாதலால் பக்குவான்மாவாகிய நந்தி, பாச நீக்கத்துக்கான பலிபீடம், வழிபாட்டுப்பயன் தரும் சண்டேசுரர் முதலிய எழுந்தருளிகள் அங்கே கிடையா. ஆன்ம ஈடேற்றம் வெளிப்படுத்தும் கொடிமரமும் கிடையாது. கருவறையில் சிவலிங்கம் என்னும் அமைப்பின்றி அடிப்பாகமாய ஆவுடையார் மாத்திரமுள்ளதால் இதற்கு ஆவுடையார் கோயில் என்பது பெயராகும். இது இறைவன் அருவமானவர் என்பதையே குறிப்பதாகும். இது தெற்கு நோக்கியே அமைந்தது. இங்கு வழிபடுபவர்களுக்கு இயமபயமில்லை என்பது கருத்தாகும். இங்கே பச்சை, மஞ்சள், சிவப்பு விளக்குகள் முக்கண் அப்பனைச் சோதியாக, சுடராக, சூரியன் சந்திரன் அக்கினியிற் காட்டுகின்றன. இங்கே அம்பிகையின் திருநாமம் யோகாம்பிகை என்பதாகும். அவளுக்கும் இங்கே உருவமில்லை. தாமரை இதழ்கள் பொறிக்கப்பெற்ற ஒரு பீடத்தில் இரு திருவடிகள் பொறிக்கப் பெற்றுள்ளதைப் பலகணியூடாகப் பார்த்துப் பக்தி கொள்கிறார்கள், பரவசமடைகிறார்கள். இங்கே மாணிக்கவாசக சுவாமிகளின் சந்நிதி மகிமை வாய்ந்தது.

அவருக்கு இங்கே வழிபாடு நடைபெறுகிறது. அம்பிகைக்கும் அவருக்கும் சமகாலபூசை அமைதியானது. அவருக்கே எல்லாவிதமான சிறப்புகளும் இறைவன் கொடுத்தருளி விட்டுத் தாம் ஒடுங்கி நிற்கிறார். குருந்த மரத்தடியில் தாம் அவருக்கு செய்தருளிய தீட்சை, உபதேசமாகியனவற்றை நினைவுபடுத்தும் வகையில் இங்கே பலவகையான சிற்பங்கள் மலிந்துள்ளன. இங்கே தான் ஆன்ம ஒடுக்கம் உண்டாகிறது. இங்கே பகலில் அமுதும் கீரையும், இரவிற் பாகற்காய்க்கறியும் அமுதும் சுடச்சுட நிவேதனமாகின்றன.

மார்கழி மாதத்தில் சந்திரன் திருவாதிரையை மருவி நிற்பதால் மகத்தான மாதமாகிறது. திரு என்னும் அடைமொழி ஆதிரைக்கும், ஓணத்துக்கும் தனிச்சிறப் பளிக்கிறது. ஆதிரையான், ஆதிரையான் என்று பழைய காலத்தில் சிவனை வழங்கி வணங்கினார்கள், மார்கழி மாதம் திருவாதிரை நாள் வரப்போகிறதையே என்று பண்ணையில் வேலை செய்தவர் சனரஞ்சமாகப் பாடியதாகப் பக்திக் கீர்த்தனை கூறுகிறது.

## மானிப்பாய் கோயிற்பற்று
## இந்துசமய விருத்திச் சங்கம்
## நவராத்திரி விழா

இதில் மானிப்பாய், ஆனைக்கோட்டை, நவாலி, சுதுமலை, சண்டிருப்பாய் முதலான ஊர்களில் நடைபெறும் பண்ணிசை வகுப்புப் பிள்ளைகள் பங்குபற்றியுள்ளார்கள். பண்ணும் பரதமும் இன்னும் வளர எல்லோரும் உதவுவார்களாக.

★ நல்ல நூல்களைப் படித்தல் நல்ல பொழுதுபோக்கு ★

# குழந்தைகளை மனிதராக்கப் பெரும்பணி

பழைய காலத்து முனிவர்கள் பெரியவர்கள் தம்மையடைந்த சிறுவர்களைப் பெரியவராக்குவதில் ஆற்றல் பெற்றிருந்தார்கள். வாய்மொழி என்னும் உபதேசத்தாலும், தொடுதல் என்னும் தீட்சையினாலும், கடைக்கண்பார்வை என்னும் நயனதீட்சையாலும், நினைத்தல் என்னும் மானசீக தீட்சையாலும் முனிவர்கள் பெரும் காரியங்களைச் செய்தார்கள்.

இவை யாவும் புராணேதிகாசக் கதைகளாயிருக்கலாம் எனக் கருதுபவர்கள், தயவுசெய்து கிழக்குத்தமிழ்ப் பகுதியில் கல்லடி - உப்போடைப்பகுதியில் இராமகிருஷ்ணபுரம் அமைத்து குழந்தைகளைப் பாதுகாத்து மலர்த்தும் சுவாமியைச் சென்று பாருங்கள் சுவாமிக்கு இன்று கண் வருத்தம், உடலில் பல்வேறு வருத்தங்கள். அவர் சொல்லுகிறார் இவை தமக்குப் பிராரத்துவம் என்றும் இவற்றை தாம் சகித்துக்கொள்ள வேண்டும் என்றும், ஆனால் இவை தம்மைச் சேர்ந்தவர்களின் பாப நீக்கத்தால் தம்மீது சுமத்தப்பட்ட சுமையல்லவோ. அவர் எடுத்துச் சுமக்கிறார் என்போம். அவர் இடையிடை கண் மருத்துவத்துக்காகக் கண்டிக்கும் கொழும்புக்கும் போனாலும் பிள்ளைகளை நேசங்காரணமாக நினைக்கும்போதோ அவர்கள் மனிதராக உருவாகிறார்கள். நினைத்தாலே போதும். நெஞ்சே நீ நினையாய். நெஞ்சத்து நினைப்பு எல்லாம் வல்ல மானசிக தீட்சை. பீமன் நினைத்தவுடனே காட்டுப் பூக்கள் எல்லாம் கைலாச மலைபோல் சிவபெருமான் திருவடியில் குவிந்தன. நினைமின் மனனே!

## சைவப்புலவர் கந்தசுவாமி அவர்களின் சிவப்பணி

கந்தசுவாமி என்னும் ஆசிரியர் சாதாரணமனிதன். அவருக்கு வீட்டுக்காரியங்களை விட வெளி அலுவல்கள் மிகப்பல. கோயில் ஒன்றை நடத்துகிறார். சமயபாடப் பரீட்சை வைத்துப் பரிசுகள் சான்றிதழ்கள் வழங்குகிறார். அவரின் விடாப்பிடியான தொண்டினை வாழ்த்திப் பாராட்டிய மில்க்வைற் தொழிலதிபர் அவருக்கு என்றும் பக்கபலமாயிருக்கிறார். சைவம் வளரவேண்டும். காஞ்சிப் பெரியவர் போலப் பெரியவர்கள் செய்யவேண்டிய பணியைத் தம்பி கந்தசுவாமி செய்கிறார். இவர் பணி வெல்க.

## நல்லூரில் டிசம்பர் மாத நிகழ்ச்சிகள்

| | | | |
|---|---|---|---|
| 1. | திங்கள் | ... | சோமவாரம் மாலை 4-00 |
| 6. | சனி | ... | முத்துக்குமாரசுவாமி அபிடேகம் காலை |
| 8. | திங்கள் | ... | சோமவாரம் மாலை 4-00<br>திருவெம்பாவை காலை |
| 14. | ஞாயிறு | ... | கார்த்திகை மாலை 5-00 |
| 15. | திங்கள் | ... | சோமவாரம் மாலை 4-00 |
| 16. | செவ்வாய் | ... | சங்கிராந்தி தீர்த்தம் காலை 8-00<br>முத்துக்குமாரசுவாமி ஊஞ்சல்<br>கைலாசவாகனம் மாலை 5-00 |
| 17. | புதன் | | திருவாதிரை உற்சவம் காலை 7-00 |

## கலாசார நூலகம்

கலாச்சாரம், பண்பாடு, சால்பு என்றெல்லாம் பேசியும் எழுதியும் வருகின்றவர்கள், ஒருமுறை நாவலர் வீதியில் நாவலர் பெயரால் அமைந்த கலாச்சார மண்டபத்தின் மேன்மாடியில், செருப்பை சப்பாத்தை வெளியிலே கழற்றி விட்டு ஏறிச்சென்று ஐந்து பெரிய அறைகளில் அடுக்கடுக்காக அடுக்கி வைத்துள்ள தமிழ் ஆங்கில நூல்களைக் காணவேண்டும். எழுபது ஆண்டுகள் வரை ஓயாமல் படிக்கும் வழக்கம் உள்ள கிழவனார் ஒருவர் இன்று ஒதுங்கி இருந்து படித்தவாறே தமக்கு இன்னும் படிப்பதற்கு பல ஆண்டுகள் வேண்டுமென்கிறார். தமிழ் நாடு உபகரித்த நூற்றொகுதிகள் எத்தனை எத்தனை. நாடோடிப்பாடல்கள், நாட்டார் இலக்கியங்கள், சங்க இலக்கியங்கள், இலக்கணங்கள், திருமுறைகள், திவ்விய பிரபந்தங்கள், காப்பியங்கள், வரலாறுகள், கல்வெட்டுக்கள், அகராதிகள், பேச்சுக்கள், விமர்சனங்கள் இன்னும் எத்தனை எத்தனை பதிப்புகள் எல்லாம் நிறையவுள்ளன.

இந்தியா எனும் பாரதநாட்டிலே 60,000 நூலகங்கள் உள்ளன. சின்னஞ்சிறிய எங்கள் நாட்டில் உள்ள அத்தனை பேருக்கும் தமிழ்க்கலாச்சாரம் தெவிட்டுமளவில் போதிய நூல்கள் எனக்குக் கிடைத்துள்ளன. சென்று பயன்படுத்துவோர் காலை பதினொன்று முதல் மாலை ஐந்து வரை திங்கள் தவிர்ந்த நாள்களில் ஒதுங்கியிருந்து ஒருமுகமாகப் படித்தின்புறலாம். நிறையத் தேனுண்ணலாம்.

## அரியாலை காந்தி சனசமூக நிலையம்

குழந்தைச் செல்வங்களைக் குறையில்லாமல் நிறைவான கல்வியூட்டி நல்ல குடிமக்களாக மலரும் வண்ணம் வளருங்கள் என்று மில்க்வைற் தொழிலதிபர் அரியாலையில் பேசியதையும், உதவியதையும் பெரியவர்கள் வெகுவாகப் பாராட்டியுள்ளார்கள். தமிழ்க்கல்வி ஆத்திசூடி கொன்றைவேந்தன், உலகநீதி, நல்வழி முதலான நீதி நூல்களில் ஆரம்பித்தல் வேண்டும் என்பது தொழிலதிபரின் அபிலாசை. அதற்காகவே இவர் இவற்றை இலவசமாக விநியோகிக்கிறார்.

## கிளிநொச்சி கொத்தணிப் பாடசாலைகள்

கிளிநொச்சியில் பரவலாகப் பயன்படும் வகையில் அமைக்கப்பெற்ற சக்தி பீடத்திற்கு உதவிக்கரம் நீட்டியதோடு, நல்லமுறையில் ஒரு உரையையும் எழுதியனுப்பிய மில்க்வைற் தொழிலதிபரின் இரட்டைப் பரிசுகளைக்கண்டும் கேட்டும் மகிழ்ந்த மாணாக்கர், மாணாக்கியர் மகிழ்ச்சிப் பெருக்கில் மலர்ந்தார்கள் என்று மட்டிலா உவகையோடு அதிபர் பொன் சபாபதி அவர்கள் பாராட்டுகிறார்.

## கலிபோணியாவின் தொலைநோக்கிக் கண்ணாடி

பலோமார் மலையில் ஹேல் தொலைநோக்கி என்னும் பெயரமைந்த கண்ணாடியின் விட்டம் 200 அங்குலம், அதன் மூலம் நோக்கும் போது சந்திரன் 200 மைல் தூரத்தில் தோன்றும்.

# இம்மாத நினைவுக்குரியவர்கள்

மாவை வெண்ணெய்க் கண்ணனூர் எனத் தம்மைத் தமிழ் சுவைக்க வழங்கிய நவநீதகிருஷ்ண பாரதியார் தமிழ்நாட்டுப் பழைய பண்டிதர் திருவாவடுதுறையாதீனத்து மகாசந்நிதானம் அவர்களின் அன்புக்குரியவர். நான்காம் தமிழ்ச்சங்கத்து அரங்கேறியவர். சேர் இராமநாதன் அவர்களின் அன்புப் பிடியில் அகப்பட்டு இங்கே வந்து இராமநாதன் கல்லூரியிலும், பரமேஸ்வராக் கல்லூரியிலும், பண்டித ஆசிரியகலாசாலையிலும் தமிழ் பயிற்றியவர். பாட்டாலே பேசுபவர். எதற்கும் எடுத்தவுடனே பாடுபவர். பழுத்த தமிழ்ப் பாவலர். உலகியல் விளக்கம் என்னும் நூலைச் சங்கத் தமிழ்தொனிக்கப் பாடியவர். பறம்புமலைப்பாரி, செங்கதிர்ச் செல்வன் முதலிய சிறு பிரபந்தங்களும் செய்தவர். திருவாசகத்துக்குப் பாரிய உரை விரித்தவர்.

❊ ❊ ❊



இராசேந்திர பிரசாத்


பாரத நாட்டு முதல் சனாதிபதி இராசேந்திரபிரசாத் மகாத்மா காந்தியடிகளின் வழியில் பெரும்பணி புரிந்த மகான்.

❊ ❊ ❊

வங்காளம் தந்த மகாமேதை மகரிஷி அரவிந்த யோகி இளவயது முதல் இங்கிலாந்திலே வாழ்ந்து கல்வி கற்று விற்பத்திமானாகி மீண்டு, இந்தியாவில் வெள்ளையர் அரசாங்கத்தில் மிக மேலான பதவி வகித்து, திருவருட் குறிப்பு, மனச்சாட்சி என்பனவுக்கு மாறாக நடக்கவிரும்பாமல் பதவியைத் தள்ளிவிட்டுத் தேசத்தொண்டில் தீவிரமாக ஈடுபட்டுப் புதுச்சேரியில் புகலிடம் அமைத்துப் பெரிய ஆச்சிரமமாக்கி அறிவொளி வீசும் பெருநகரம் கண்ட மகான். தெய்விகவாழ்வு, சாவித்திரி முதலிய பெருநூல்கள் கண்டவர். அவரைப்பற்றி ஆராய நமக்குச் சக்தி போதாது.

கிருஷ்ணமூர்த்தி என்பவர் இராசகோபாலாச்சாரி அவர்களின் எழுத்தாளராகியிருந்து, எழுத்துலகில் புகுந்து ஆனந்தவிகடன் என்னும் சஞ்சிகையை உச்சகட்டத்துக்கு உயர்த்திவிட்டு, கல்கி என்னும் பத்திரிகையைக் கண்டு நடத்தியவர். பேச்சும் எழுத்தும் நகைச்சுவை ததும்ப சனரஞ்சகமாகப் பெருகியோட வழிகண்டவர். பல சரித்திர நவீனங்களைப் பெருமளவில் அலுப்புத் தட்டாமல் எழுதிக் குவித்தவர். அவரின் புனைபெயர் கல்கி.

❊ ❊ ❊



மகாகவி சுப்பிரமணிய பாரதியார்


மகாகவி சுப்பிரமணிய பாரதியாருக்கு இளமையில் பாரதி என்னும் பட்டம் கொடுத்தவன் யாழ்ப்பாணப் புலவன். பாரதியாரின் ஞானகுருவாய் இருந்தவர் யாழ்ப்பாணத்துச் சித்தர் அருளம்பலயோகி.

❊ ❊ ❊

எல்லாரும் மானிடராவரோ, பாலெல்லாம் நல்ல பசுப்பாலாகுமோ, பாரில் உள்ள நூல் எல்லாம் வள்ளுவர் செய்நூலாகுமோ. சனாதிபதிகள் எல்லோரும் வாசிங்ரன் ஆவரோ? எனுமளவில் அமெரிக்காவைப் பரிபாலித்தவர்.

❊ ❊ ❊

நாவலர் அவர்களின் தமக்கைமார் ஆறு பேருள் ஒருவர் பெற்ற உச்ச விவேகி தமிழ்வல்ல வித்துவசிரோமணி நல்லூர் சரவணமுத்தர் பொன்னம்பலபிள்ளை அவரை பொன்னையா உபாத்தியாயர் என்றும் வழங்குவர். அவரை மதித்த அரசாங்க அதிபர் அவரை அழைத்து, நொத்தாரிசு வேலை கொடுத்தவர். பொன்னம்பலபிள்ளை பயன்சொல்வதிலும், உரை எழுதுவதிலும் வல்லவர். நயம் கூறுவதில் அன்றைய தமிழ் கூறும் உலகில் முதல்வர். அவர் திருமறைக் காட்டில் சுவாமிதரிசனஞ் செய்து சிலநாள் தங்கியிருந்தமை கேட்ட பின்னத்தூர் நாராயணசுவாமி ஐயர் அவர்கள் அவரிடம் சென்று நின்று தமிழ் பயின்று, நற்றிணையுரை, நீலகண்ட ஈசுரக் கோவை செய்தவர். யாழ்ப்பாணத்தில் வித்துவான் கணேச ஐயரவர்கள் பொன்னம்பலபிள்ளை அவர்களின் உத்தம மாணாக்கர். பொன்னம்பலபிள்ளை ஆறுமுக ஐயர்க்கே ஆட்பட்டு அவரிடம் படித்தவர். வேறறங்கள் வேண்டாம் என அமைதிகண்டவர். அன்றைய தமிழ் நாட்டார் தமிழின்பம் சுவைப்பதற்கு நல்லூரரை நாடிக் கூட்டங் கூட்டமாய் வந்து சுவைத்துப் பூரித்துப்போனதும் உண்டு.



அன்னை சாரதாதேவி

பெரிய அன்னை என வாழ்ந்த தவச்செல்வி, படிப்பறிவில்லாமலே இராமகிருஷ்ண பரமஹம்ச தேவரின் தர்ம பத்தினியாயிருந்து நல்லறங்கள், ஞானங்கள் எல்லாவற்றையும் அறிந்து போதித்தவர்.

❊ ❊ ❊



சுவாமி சச்சிதானந்தர்

கண்டியில் தெனகும்பரா என்னும் இடத்தில் ஆச்சிரமம் அமைத்து, ரிஷிகேசம் சிவானந்த குருவிடம் தாம் பயின்றவற்றை அடியார்களுக்குப் பழக்கியவர் சுவாமி சச்சிதானந்தர். அவரிடம் யோகாசனம் பழகிய பலருள் மில்க்வைற் தொழிலதிபரும் ஒருவர். இன்று சுவாமி சச்சிதானந்தர் அமெரிக்காவில் யோகம்மூலம் சாந்திநெறி பழக்கிப் பெரும்புகழ்பெற்று விளங்குகிறார். சுவாமி சச்சிதானந்தர் வாழ்க.

No washing is complete without
Milk White Blue Soap

Milk White products are
successful choice everywhere

## அறிந்து கொள்ளுங்கள்

1. குர்க்காஸ் இனத்தவர் நேபாளத்தில் உள்ளவர்கள்
2. போர்மோசாவின் புதுப்பெயர் தைவான்
3. நினைவாற்றல் உள்ள மிருகம் யானை
4. ரஷ்ய அறிஞர் போரிஸ் பஸ்ரநாக் நோடல் பரிசை நிராகரித்தவர்
5. வெள்ளை நதியும் நீலநதியும் கலக்குமிடம் காட்டூம்
6. சார்ளிசப்லின் நடித்த முதற் பேசும்படம் பெரிய சர்வாதிகாரி
7. ஆபிரிக்க யானையின் சாரசரி நிறை 11 தொன்
8. கட்டாயமாக வாக்களிக்க வேண்டியநாடு அவுஸ்திரேலியா
9. பாற்கட்டி உற்பத்தி அதிகமுள்ள நாடு நோர்வே
10. மாஜறைன் உணவை முதலிற் செய்தவர் மெக மோறிஸ்
11. அலுமினியம் என்ற பெயர் சூட்டியவர் ஹம்ரிடேவி
12. மனித உரிமைகளை வகுத்த பெருமாட்டி எலினர் றூஸ்வெல்ட்
13. வயதிற் குறைந்த அமெரிக்க சனாதிபதி கெனடி
14. நல்ல முறையில் சவர்க்காரம் செய்யக் கண்டவர் பிறெமி

## அம்மச்சியா குளம்

யாழ்ப்பாணத்து நல்லூர் – கந்தமடம் ஆகிய ஊர்களைத் தொடும் அரசடி வீதியில் அமைந்த சனசக்தி நிலையம் பொதுநன்மை, சமூகமேம்பாடு, கல்வி, படிப்பறிவு சம்பந்தமாகப் பணிசெய்யும் வகையில் அம்மையா குளத்தையும் துப்பரவு செய்வதற்கு மில்க்வைற் தொழிலதிபர் உபகரணங்கள் உள்ளன்போடு உபகரித்தமையை நிலையத்தார் நேசம் நிறைந்த நெஞ்சில் பாராட்டி நன்றி கூறியுள்ளார்கள்.

## மலையகத்தில் மதிப்பு

எங்கள் நாட்டில் மலைப்பிரதேசம் யார் குடியேறி இருந்தாலும் சைவகலாசாரம் பிரகாசிக்கும் பகுதியாகும். பொன் கொண்டிழைத்து மணிகொண்டு பதித்த பகுதி அது என்று இராமாயணம் புகழும் வகையில் கம்பர் பாடியுள்ளார். அங்கே நோட்டன் பிரிட்ஜ் பகுதியில் ஸ்ரீ சித்தி விநாயகப்பெருமான் திருநாமம் தாங்கிய கணபதி வித்தியாலயம் சைவமணங்கமழும் கல்வி நிலையமாகும். அயலவரும் பெருந் தோட்டப்பகுதியினரும் பங்குபற்றிய கல்வி, கலை, கலாசார நிகழ்ச்சியில் தொழிலதிபர் கனகராசா பங்கு பற்றுதல் வேண்டுமென அவர்கள் ஒழுங்கு செய்த நிகழ்ச்சியில் இன்றைய நிலைமையால் இவர் பங்கு பற்றவில்லை. எனினும் அவர்கள் இவர்மீது கொண்ட பெருமதிப்பு காரணமாக இவரை ஆயிரவர் மத்தியில் பாதுகாவலராகப் பண்போடு தெரிவு செய்து பணி செய்யுமாறு வேண்டுகிறார்கள். இன்னும் 1987- 2- 20 ஆம் நாள் இருபதாம் ஆண்டு நிறைவு விழாவில் பங்கு பெறுமாறு உருக்கமாக வேண்டி நிற்கிறார்கள்.

★ உண்மை பேசுபவன் மனம் தெளிவு பெறுகிறது ★

## நல்லவர் ஒருவரின் மறைவு



பிரமஸ்ரீ ச. வைத்தீஸ்வர சர்மா அவர்கள் புன்முறுவல் பூத்த முகப் பொலிவோடு தமது அறுபத்துமூன்றும் வயதளவில், ஆரா அமுதன்பால் தீரா அன்புகொண்ட அதி தீவிர பக்குவத்தில் அமரரானார். நல்ல குணமும் அடக்கமும் அறிவும் இசைவளமும் பெற்ற இவர், எல்லோர்க்கும் நல்லவர். நல்ல குருக்கள் என்று புகழ் பெற்றவர். பொன்னாலை வரதராசப் பெருமாள் தேவஸ்தானத்தில் இவர் செய்த பணி ஊரறியும், நாடறியும். இவருடைய ஆன்ம சாந்திக்கு எங்கள் பிரார்த்தனை. வாழ்க வளர்க இவர் தொட்ட பணி. அன்னாரின் இறுதிச்சடங்குகளில் பங்குபற்றிய மில்க்வைற் தொழிலதிபர் அன்னார் நினைவாக ஒரு வில்வமரம் நாட்டி வணங்கினர்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

## சலரோகம் என்னும் நீரிழிவு

மாவை அரிமாசங்கம் என்னும் லயன்ஸ் கழகத்தார் வேண்டுகோளுக்கு இணங்கி அவர்கள் தயாரித்த துண்டுப் பிரசுரத்தை மில்க்வைற் தொழிலதிபர் வெளியிட்டுப் பரப்பியுள்ளார். அதில் நோயின் தாக்கமும் சிகிச்சை முறையும், நோயின் அறிகுறிகள் சிகிச்சை பெற வேண்டிய அவசியம், சிகிச்சை முறைகள், மருந்து வகைகள், குளிசைகள், இன்சுலின் ஓமோன், சில எச்சரிக்கைக்குறிப்புக்கள், கட்டுப்பாட்டின் அளவை, செய்கைமுறை, உணவுக் கட்டுப்பாடு, மாதிரிச் சாப்பாடு என்பன விளக்கப் பெற்றுள்ளன.

1. சீனி, இனிப்பை நீக்குதல்
2. அரிசி, மா உணவைக் குறைத்தல்
3. ஆட்டாமா, ரவை நல்லவை
4. பால், முட்டை பயன் தருபவை
5. புரதப்பொருள் தீமையற்றவை
6. இலைவகைகள் அதிக நன்மை தருவன
7. கிழங்கு வகைகள் ஆகாதவை
8. புளிவாழைப்பழம், பப்பாப்பழம் அளவாக உண்ணலாம்.
9. மாமயிற், சோயா நல்லவை.

## அரிது அரிது ஆரிது ஆற்றுவார்?

ஏழாயிரம் மையிலுக்கப்பால் கடல் கடந்து கலை கலாச்சாரம் கடந்து, புறச்சமயச் சூழலில் உழைக்கச், சென்றவர்கள், உலகப்புகழ் பெற்ற லண்டன் மாநகரிலே சைவத்தமிழ்ப் பணி நாழிகை தவறுமல் நல்லமுறையில் செய்கிறார்கள் என்றால் அந்த ஆனந்த கோலாகலம் ஞானசூரியப்பிரகாசம், சைவபரிபாலனம் சமஸ்கார கிரியை ஒழுங்கு, தியாகச்செல்வம், இல்லத்தரசிகள் ஒத்துழைப்பு, விருந்துபசாரம் எல்லாம் உள்ளத்தை உருக்குவன. சிவகுருநாதன் அருணன், மாணிக்கவாசகர், இராமநாதன், தில்லைநடராசன், செந்தூரன் சைவத் தமிழ்ப்பெயர்கள் நிகழ்ச்சி நிரலில் இடம்பெறக் கந்தன் கருணை முதலாய தலைப்பில் ஒலிபரவ, நல்லூரன் அருட் பிரசாதம் எல்லோருக்கும் கிடைக்க வழி செய்யும் இங்கிலாந்தின் சைவமுன்னேற்றச் சங்கத்தின் பதிவு இலக்கமும் 292085 ஆகும். இவர் தம் தர்மப்பணியை வெள்ளையர் வியக்கிறார்கள். நவராத்திரி, கந்தசஷ்டி, விநாயகசஷ்டி தைப்பொங்கல் நிகழ்ச்சிகளை நாமறிந்து உளம் பூரிக்கிறோம். வாழ்க வெல்க பத்தாண்டுப்பணி நிறைவு கண்டவரான பரமபக்தர்களின் புத்தாண்டுப் பணி பரவலாகுக.

## 1986 டிசம்பர் மாத நிகழ்ச்சிகள்

(கார்த்திகை 15 முதல் மார்கழி 16 வரை)

| | | | |
|---|---|---|---|
| 1. | திங்கள் | ... | அமாவாசை விரதம் |
| 6. | சனி | ... | விநாயக சஷ்டி விரதம் |
| 8. | திங்கள் | ... | திருவெம்பாவை ஆரம்பம்<br>பகல் 8-17 அட்டமி |
| 9. | செவ்வாய் | ... | அட்டமி நவமி |
| 10. | புதன் | ... | காலை 6-31 வரை நவமி |
| 12. | வெள்ளி | ... | ஏகாதசி விரதம் |
| 13. | சனி | ... | பிரதோச விரதம் |
| 14. | ஞாயிறு | ... | கார்த்திகை விரதம் |
| 15. | திங்கள் | --- | பூரணை விரதம் |
| 16. | செவ்வாய் | ... | தமிழ் மார்கழி பிறப்பு<br>நடேசர் ஆர்த்திராபிசேகம் |
| 17. | புதன் | ... | உதயம் ஆர்த்திரா தரிசனம்<br>திருவாதிரை |
| 18. | வியாழன் | --- | நாவலர் தோன்றிய நாள் |
| 23. | செவ்வாய் | ... | இரவு 10-15 மேல் அட்டமி |
| 24. | புதன் | --- | அட்டமி நவமி |
| 25. | வியாழன் | --- | இரவு 9-02 வரை நவமி |
| | | ... | நத்தார்ப் பண்டிகை |
| 27. | சனி | ... | ஏகாதசி விரதம் |
| 28. | ஞாயிறு | --- | பிரதோச விரதம் |
| 29. | திங்கள் | ... | கெர்ப்போட்டம் ஆரம்பம் |
| 30. | செவ்வாய் | --- | அமாவாசை விரதம் |
| 31. | புதன் | ... | 1986ம் ஆண்டுக்குப் பிரியாவிடை |

### ஆசியாவில் மிகப்பெரிய தொலைநோக்கி

தமிழ் நாட்டில் காவலூரில் உள்ள வைணுபாப்பு என்னும் தொலைநோக்கி ஆசியாவில் உள்ள நோக்கிகளுள் பெரியது.




# திறையும் பேட்டியும்

அரசனானவன் காட்சிக் கெளியனாகவும். கடுஞ்சொல் இல்லாதவனாகவும் இருத்தல் வேண்டும் என்பது வள்ளுவர் நீதி. பழைய காலத்தில் குடியானவன் மன்னனைக் கண்டு வணங்கி, தன் மனக் குறையை விண்ணப்பித்தல் வழக்கம். பெரியவர்களிடம் போகும்போது வெறுங்கையுடன் போகாமல் பழம், தேன், சந்தனம் முதலியன ஏதாவது எடுத்துச்செல்லல் வழக்கம்.

அந்த வழக்கம் யாழ்ப்பாணத் தமிழரசர் காலத்திலும் நிலவியது. பின்னர் ஒல்லாந்தர் அதைத் தமக்குச் சாதகமாக்கிக் கொண்டார்கள். குடியானவர் அதிகாரிகளைக் காண வரும்போது கோழி, ஆடு, நெய்முட்டி, முதலியன கொண்டு போதல் வழக்கமாயிற்று. வருமானத்தில் கண்ணாயிருந்த அதிகாரிகள் குடியானவர் தம்மை அடிக்கடி காண்பதற்கு சந்தர்ப்பம் சூழ்நிலையை உண்டாக்கினர். இதனால் கைவினை வல்லவர் பலர் தாம் தாம் செய்த மரத்தளபாடம், இரும்பு ஆயுதம் முதலியவற்றை எடுத்துச்சென்று திறைபோலக் கொடுத்துத் தம் குறைகளைக் கூறினர்.

# திருவாட்டி சத்தியதேவி துரைசிங்கம்



நெடுந்தீவிலிருந்து படிப் பார்வம் உள்ள அக்காவும் தம்பியும் சைவ வித்தியா விருத்திச் சங்கமறியக் கல்வி பயின்றனர். அக்கா இராமநாதன் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் இளமையிலேயே பயின்று ஆசிரியையாயினர். அவர் முத்துத்தம்பி வித்தியாசாலை ஒரு பெரிய பல்கலைக்கழகம் போல நிலவிய காலத்தில் ஆசிரியையாகச் சேர்ந்தார். தூய்மையான போக்கு உடை உடம்பு உள்ளம். அமைதியாகக்கற்பித்துவந்த காலத்தில் பண்டிதர்மார் பலர் அங்கே உடன் ஆசிரியர்களாயிருந்தனர். அவர்கள் பண்டிதமணி அவர்களால் உருவாக்கப்பெற்றவர்கள். அவர்களுள் துரைசிங்கம் என்பவர் கதர்மயமானவர். சேவை மனப்பான்மை கொண்டவர். அவரும் அம்மையாரும் இணைந்து இல்லறம் நடத்திய காலத்தில் அம்மையார் பண்டிதையாயினர். பொன்போற் புதல்வியரையும் புதல்வரையும் பெற்றனர். காந்தியடிகள் வழி, குன்றக்குடியடிகளார் கொள்கை முதலியனவுக்கு அவர்கள் இருவரும் இணைந்து செய்த சேவை, திருநெல்வேலி, கோப்பாய், நீர்வேலி, புத்தூர் எங்கும் புகழ் மணக்கப்பரந்தது. பிள்ளைகள் பெரியவராய பின், தமக்கென்ன வேலை இங்கே என்று அவர்கள் உலகைவிட்டு வெவ்வேறு காலங்களில் போயினர். அம்மையாரின் ஆழமான அமைதியான அன்பான குரல் அங்கே கேட்கின்றது. வாழ்க அவர்கள் பெயர்.


## காலம் பெறுமதியானது

வீணே கழியும் ஒரு நிமிடத்தையேனும் மீண்டு உபயோகிக்கமுடியாது. எனினும் இதையறிந்த பின்னும் எவ்வளவு நேரத்தை வீணாக்குகிறோம்.

— மகாத்மா காந்தி




நொடிப்பொழுதில் உங்கள் ஆடைகளின் அழுக்கை அகற்றி பளிச்சிடும் வெண்மையைப் பெறுவதற்குப் பாவியுங்கள்.

## சுப்ப மில்க்வைற் சோப்

இது ஒரு மில்க்வைற் தயாரிப்பு

ஒரு கட்டி விலை ரூபா 4-50 மட்டுமே

மேலுறைகளைச் சேகரித்துப் பின்வரும் பொருட்களை இனமாகப் பெற்றுக்கொள்ளுங்கள்

2 மேலுறைகளுக்கு 1 அழகிய ஸ்ரிக்கர்
5 மேலுறைகளுக்கு 1 அப்பியாசக் கொப்பி அல்லது 1 மில்க்வைற் செய்தி அல்லது 1 பொலித்தீன் பாக்
15 மேலுறைகளுக்கு 1 அழகிய கைலேஞ்சி.


யாழ்ப்பாணம் சாந்தி அச்சகத்தில் அச்சிட்டவர் திரு. தி. நாகரத்தினம். யாழ்ப்பாணம் மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகத்தின் சார்பாக வெளியிட்டவர் "சிவநெறிப் புலவர்" க. கனகராசா ஜே. பி. அவர்கள் கௌரவ ஆசிரியர் திரு. க. சி. குலரத்தினம் 1 - 12 - 86